# ஸ்ரீ இராமர் ஆலயம்

## மஹா ஸம்ப்ரோக்ஷணம்

# శ్రీరామ ఆలయం

## మహా సంప్రోక్షణ పత్రిక

# SREE RAMAR TEMPLE

## MAHA SAMPROCHANAM

10-6-2018



Kuala Perak Estate / கோலப்பேராக் தோட்டம்

KOPERASI NLFCS BERHAD



உ

ஸ்ரீய:

ஸ்ரீமத் விகநஸ மஹா குரவே நம:

# ஸ்ரீ இராமர் ஆலயம்

கோல பேராக் தோட்டம், ( பாகான் டத்தோ) பேராக் மாநிலம்

# மஹா ஸம்ப்ரோக்ஷணம் பத்திரிகை

ஸ்வஸ்தி ஸ்ரீ விளம்பி வருடம் வைகாசி மாதம் 27-ம் தேதி

ஞாயிற்றுக்கிழமை ( 10-06-2018 )

ஸ்ரீய : காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்தினாம்

ஸ்ரீ வேங்கட நிவாஸாய ஸ்ரீனிவாஸய மங்களம்!

பரதனும் தம்பி சத்துருக்கன்னும்
இலக்கும னோடுமை திலியும்
இரவு நன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனையெம்மானை
குரவமேகமழும் குளிர்பொழு லூடு
குயிலொடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக் கேணிக் கண்டேன்


குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியா
படுதுய ராயின வெல்லாம்,
நிலந்தரும் செய்யும் நீறவிசும் பருளும்
அருளொடு பெருநில மணிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்
பெரியாழ்வார் திருமொழி.

ஸ்ரீ ராகவம் தசராத் மஜம ப்ரமேயம் சீதாபதிம் ரகுகுலாந்வய ரத்ன தீபம்!
ஆஜானுபாஹூம ரவிந்த தளாய தாம ஸ்ரீராமம நிசாசர
விநாயசகரம் நமாமி!

ஸ்ரீமத் அகிலாண்ட கோடி ப்ரம்மாண்ட நாயகனாய் நித்ய முக்தானுபாவனாய் நிரதி சயானந்த அவஸ்த ஸமஸ்த்த காமனாய் அனந்த திருக்கல்யாண குணகண பரிபூர்ணனாய் சகல பக்த ரக்ஷகளைப் பிராதிக்கின்ற ஸர்வேஸ்வரனான ஸ்ரீமத் நாராயணன் நிகில சேதனர்களை உய்விக்கச் செய்யும் பொருட்டு அநேக அவதாரங்கள் எடுத்தார். அதில் ஸ்ரீராமவதாரம் மிகவும் சிரேஸ்டமானது. அது பூர்ணாவதாரம் என்று சொல்லப்படும். ஆகையால் இது மிகவும் உயர்ந்த அவதாரமாக சொல்லப்படுகிறது. இவ்வளவு பெருமை கொண்ட ஸ்ரீராமபிரான் அர்ச்சாரூபியாய் அனேக திருக்கோயில்களில் எழுந்தருளி உள்ளார்.

மலேசியாவில் வாழும் பக்தர்களுக்காக தெலுக் இந்தான் நகருக்களில் உள்ள தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான கோல பேராக் தோட்டத்தில் மனோ பீஷ்டங்களை நிறைவேற்றும் பொருட்டு, எம்பெருமான் ஸ்ரீ கோதண்ட ராமனாக பிராட்டியோடும், இளையோனோடும் தனக்குப் பிரியமானவர்களான கருடன், ஹனுமார், விநாயகர், மூகாம்பிகை முதலானவர்களோடும் எழுந்தருளி இருக்கிறார். மேற்படி ஸ்ரீ ராம பிரானுக்கு, ஸ்வஸ்தி ஸ்ரீ நாளது ஸ்ரீ ஏவிளம்பி ஆண்டு (கிருஷ்ண பம், ஏகாதசி திதியும், அசுவனி நக்ஷத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில், காலை 9.39 மணிக்கு மேல் 11.36 மணிக்குள் கடக லக்கனத்தில்) ஆலய விமான அஷ்டபந்தன மஹா ஸம்ப்ரோணம் (மஹா கும்பாபிகேம்) நடைபெற இருப்பதால் அன்பர்களும் பெரியோர்களும் திரளாக வந்திருந்து சேவித்து மேற்படி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஸ்ரீ இராமபிரானின் திருவருளுக்குப் பாத்திரராகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன்
இயக்குனர் வாரியம்
தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கம்
ஆலய நிர்வாகம், கோல பேராக் தோட்டம்.





குறிப்பு:

1. ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான்,
யாகசாலை நிர்வாக திலகம்
**S.** ஸ்ரீராமன் பட்டாச்சாரியார்
திருவதிகை பண்ருட்டி 607106
தமிழ்நாடு, இந்தியா, 0091 9994027570

2. ஸ்தானிகர்
வைகானஸ சிரோண்மணி
**S.** மாதவன் பட்பிச்சாரியார்
மதுரை, தமிழ்நாடு.

3. ஆலய தலைமை ஸ்தபதி
ஸ்தபதியார் திலகம் **A.** தாமோதரன்
மன்னம் பந்தல் தமிழ்நாடு
017-8828704

உ

## நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|
| வைகாசி 23, புதன் 06-06-2018 | காலை 9.00 - 12.00 | ஸங்கல்பம், வாஸ்து ஹோமம், புண்யாஹம், நவகலச ஆவாஹனம், அக்னி ப்ரதிஷ்டை, அகல்ம ஹோமம், சுதர்ஸன் ஹோமம், பூர்ணாஹுதி, பிரசாதம் வழங்குதல். |
| | மாலை 5.00-10.00 | ஆச்சார்ய அழைப்பு, பகவத் ப்ரார்த்தனை, வேத பிரபந்த தொடக்கம், எஜமான ஸங்கல்பம், புண்யாஹவாசனம், ருத்சங்கிரகணம், அக்னி மதனம், அங்குரார்ப்பணம், அனைத்து குண்டங்களிலும் அக்னி ப்ரதிஷ்டை, கும்ப பூஜா த்யானம், கலாகர்ஷ்ணம், கும்பங்கள் யாகசாலா ப்ரவேசம், ரக்ஷபந்தனம், பஞ்ச ஸூக்த ஹோமம், மஹா சாந்தி ஹோமம், பூர்ணாசஹூதி, திருவாராதனம், வேதவிண்ணப்பம், பரப்ந்த சேவை (சாற்றுமுறை) எஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல். |
| வைகாசி 24, வியாழன் 07-06-2018 | காலை 7.30 - 12.00 | புண்யாஹம், காலசந்தி திருவாராதனம், மஹாசாந்தி ஹோமம், பஞ்சஸூந்த ஹோமம், அக்னி ஆராதனம், பூர்ணாஹுதி, திருவாராதனம், வேத விண்ணப்பம், ப்ரப்ந்த சேவை, கற்பூர ஹாரத்தி, எஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல். |

| | | |
|---|---|---|
| | மாலை 5.30 - 9.00 | புண்யாஹம், திருவாராதனம், ஸர்வதேவார்ச்சனம், கும்ப சயனம், ஹௌத்ரம், மஹாசாந்தி ஹோமம், அனைத்து குண்டங்களிலும் ப்ரதான ஹோமம், பூர்ணாஹுதி, யாகசாலா விசே-ச திருவாராதனம், தீப ஹாரத்தி, வேத பிரப்ந்த சாற்றுமுறை, எஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல். |
| வைகாசி 25, வெள்ளி 08-06-2018 | காலை 8.30 - 12.00 | புண்யாஹம், காலசந்தி ஆராதனம், அக்னி ஆராதனம், மஹாசாந்தி ஹோமம், ராஜகோபுர விமான அனைத்து கலசங்களும் படிய வைத்தல், அனைத்து குண்டங்களிலும் ப்ரமான ஹோமம், பூர்ணாஹுமி, திருவாராதனம், தீப ஹாரத்தி, வேத புரந்த சாற்றுமுறை, ஹாரத்தி, எஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல், அஷ்டபந்தனம் சாற்றுதல். |
| | காலை 9.00 - 9.00 | எண்ணெய் காப்பு |
| | மாலை 5.30 - 9.00 | புண்யாஹம், அக்னியாராதனம், சாயம் ஆராதனம், மஹாசாந்தி ஹோமம், அனைத்து குண்டங்களிலும் ப்ரதான ஹோமங்கள், பூர்ணாஹுதி, விசே திருவாராதனம், தீப ஹாராத்தி, வேத ப்ரப்ந்த சாற்றுமுறை, ஹாரத்தி, ஏஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல். |
| வைகாசி 26, சனி 09-06-2018 | காலை 8.00 - 12.00 | புண்யாஹம், காலசந்தி ஆராதனம், ஆதிவாசத்ரய ஆவாஹன ஹோமம், நவகலச ஆவாஹனம், அக்னி ஆராதனம், மஹா சாந்தி ஹோமம், அனைத்து குண்டங்களிலும் ப்ரதான ஹோமங்கள், பெருமாள் விசே திருமஞ்சனம், மஹாசாந்தி விசே பூர்ணஹுதி, ப்ரதான குண்டத்தில் பூர்ணாஹுதி, திருவாராதனம், வேத ப்ரபந்த சாற்றுமுறை, மஹாசாந்தி கடம் புறப்பட்டு மூலவர் உத்ஸவர் அனைத்து மூர்த்திகளுக்கும் ஆவாஹனம், திருமஞ்சனம், ஹாரத்தி, எஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல். |



| | | |
|---|---|---|
| | மாலை 3.00-10.00 | புண்யாஹம், சாயம் திருவாராதனம், விசே சயனாதிவாசம், திருவாராதனம், அனைத்து குண்டங்களிலும் ப்ரதான ஹோமம், ப்ரதான குண்டத்தில் விசே ஹோமங்கள், ப்ரதான குண்டத்தில் வஸோத்தாரா (ப்ஞ்ச ஸுக்த ஹோமம்) பூர்ணஹுதி, யாகசாலா விசே திருவாராதனம், வேத ப்ரபந்த சாற்றுமுறை, ஹாரத்தி, எஜமானர் மரியாதை, பிரசாதம் வழங்குதல். |
| வைகாசி 27, ஞாயிறு 10-06-2018 | காலை 6.00 - 11.00 | விஸ்வருபம், ஸுப்ரபாதம், புண்யாஹம், கோ பூஜா, அக்னி ஆராதனம், ப்ரதான ஹோமம், பஞ்சாங்கினி ஸமாரோபணம், மஹா பூர்ணாஹுதி,  யாத்ரா தானம் ரோடச தட்ஷிணாதானம், கடம் புறப்பாடு. |
| | காலை 11.00 | நூதன ராஜ கோபுரம், விமான கலச மஹா ஸம்ப்ரோக்ஷணம். |
| | காலை 11.30 | மூலவர் பெரிய பெருமாள் ப்ரதிஷ்டை, திருவாராதனம், ப்ரம்மஹோம், அட்சதை ஆசீர்வாதம், சாற்றுமுறை, எஜமானர் அதிகாரிகள் மரியாதை, ப்ரஸாத வழங்குதல் ஸர்வ தரிசனம், பிரசாதம் வழங்குதல். |
| | மாலை 6.00 | ஸீதா கல்யாண உத்ஸவம் |
| | இரவு 8.00 | இரத ஊர்வலம். |

# ஸ்ரீ இராமர் ஆலய வரலாறு

தென்கிழக்காசியாவில் பரவலாக வியாபித்திருக்கும் ஸ்ரீ இராமபிரானின் காவிய சரிதையை நினைவில் தேக்கி ஸ்ரீ இராமபிரானுக்கு மாபெரும் ஆலயம் ஒன்றினை எழுப்புவதை கூட்டுறவுத் தந்தை அமரர் துன் வீ.தி. சம்பந்தன் தனது இலட்சிய கனவாகக் கொண்டிருந்தார். ஸ்ரீ இராமர் ஆலயத்திற்கு பேரா ஆறு சங்கமமாகும் பாகான் டத்தோவுக்கு அருகிலுள்ள கூட்டுறவுத் தோட்டமான கோலப் பேராக் தோட்டம் தேர்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மகாபலிபுரம் கட்டட வரைபடக் கலைஞர் திரு. கோ. தியாகராஜன் அவர்கள் ஸ்ரீ இராமர் ஆலய அமைப்பை வரை படமாகத் தீட்டித் தந்தார். கட்டடக் கலைஞர் சிற்பக்கலாமாமணி திரு. கோ. வன்மீகநாதன் அவர்களைக் கொண்டு 1977ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் ஒரு நன்னாளில் கூட்டுறவுத் தந்தை அமரர் துன் சம்பந்தன் அவர்கள், கூட்டுறக் காவலர் டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர். சோமசுந்தரம் அவர்கள், அமரர் திரு. கே.கே.சாமி அவர்கள், திரு.வீ.மீனாட்சி சுந்தரம் அவர்கள் மற்றும் கூட்டுறவு சங்க இயக்குநர்களும் ஆலயத்திற்கு சிலாந்யாசம் (அடிக்கல் ) செய்தார்கள்.

தமது இலட்சியக் கனவைக் கொண்டு ஆலயத்திற்கு அஸ்திவாரம் இட்ட அமரர் துன் சம்பந்தன் அவர்கள் 18.5.1979-இல் அமரத்துவம் அடைந்து விட்டார்கள். அமரர் துன் வீ.தி.சம்பந்தன் அவர்களின் கனவை நனவாக்க ஸ்ரீ இராமபிரான் ஆலயம் அமைக்கும் நற்பெரும் திருப்பணியைத் தனிப்பெரும் முயற்சியாகக் கொண்டு சிறப்புடன் செய்து முடித்தப் பெருமை கூட்டுறவுக் காவலர் டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர். சோமசுந்தரம் அவர்களையும் இயக்குநர் வாரிய உறுப்பினர்களையும் சாரும்.

தமிழகத்தின் 30-க்கும் மேற்பட்ட சிற்பிகளைக் கொண்டு காண்போர் உள்ளத்தை ஈர்க்கும் கலை அழகுமிக்க ஆலயமாக, கட்டடக் கலைஞர் சிற்பக்கலாமாமணி திரு.கோ.வன்மீகநாதன் அவர்கள் கருவறை, அர்த்த மண்டப, விமானம், மகா மண்டபம், கோபுரம், கருடன் சன்னதி, பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றை சிற்ப சாஸ்திர முறைப்படி நிர்மாணித்துள்ளார்.





ஒவ்வொரு தூணிலும் நான்கு சைவ - வைணவ திருவுருவங்கள் வடிக்கப்பட்ட மகா மண்டபத்தைத் தாங்கும் இருபத்து நான்கு கல் தூண்களும் மகாபலிபுரத்துச் சிறக்கக்கூடத்தில் செதுக்கி கப்பலில் கொண்டு வரப்பட்டு ஸ்தாப்பிக்கட்டவையாகும். கருவறையில் இராமர், சீதை, இலட்சுமணா, அனுமன் ஆகிய திருப்படிவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஐம்பொன்னாளான உற்சவமூர்த்திகளும் வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ இராமர் ஆலய மகா ஸம்ப்ரோக்ஷணம் (மகா கும்பாபிசேகம்) கடந்த 1989ஆம் ஆண்டு மேத் திங்கள் 25ஆம் நாள் தமிழகத்தின், ஸ்ரீ T.S. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் மற்றும் ஸ்ரீராமன் பட்டாச்சாரியார்களின் தலைமையில் ஏழு பட்டாச்சாரியார்களைக் கொண்டு நடத்தப் பெற்றது. ஸ்ரீ இராமர் ஆலயத் திருப்பணிகளில் இரண்டாவது கட்டமாக பிள்ளையார் சன்னதி, இலட்சுமணர் சன்னதி, ஆஞ்சநேயர் சன்னதி ஆகிய திருப்பணிகளும் திட்டமிட்டபடிச் செய்து முடிக்கப்பட்டு இன்று கும்பாபிசேகம் நடைபெறும்.

மூன்றாவது கட்டமாக அமையவிருக்கும் இராமாயணச் சித்திரக்கூடம் இந்நாட்டில் வேறு எந்த ஆலயத்திலும் இல்லாத ஓர் அற்புத அமைப்பாகும். இராமயணக் காவியத்தை 98 காட்சிகளில் அமைத்து ஒவ்வொரு காட்சியையும் 4 X 2 அளவுள்ள கருங்கல் பாளங்களில் சித்திரமாக செதுக்கி ஆலயத்தைச் சுற்றிலும் கூடம் எழுப்பி அதில் முறையாக பதிய வைப்பதாகும். இதனைத் தொடர்ந்து திருமதிலும் இராஜகோபுரமும் அடுத்தக்கட்டப் பணிகளாக இருக்கும்.

இராமயண மகா காவியம் பரவியுள்ள தென்கிழக்காசிய நாடுகளில் மலேசியாவின் பேராக் மாநிலத்தின் தென்கோடியில் பேரா ஆற்று முகத்துவாரமான பாகான் டத்தோவுக்கு அருகில் அமைந்துள்ள ஸ்ரீ இராமர் ஆலயம் இந்நாட்டில் வாழும் இந்திய சமுதாயத்தையும், சமயம், கலை, பண்பாடுகளையும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் கூறும் ஒரு வரலாறாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# KOPERASI NLFCS BERHAD
## LIST OF BOARD OF DIRECTORS

1. **YG.BHG.TAN SRI DATO' DR.K.R.SOMASUNDRAM**
   *PSM., DPMS., AMN., JP., Ed.D*
   CHAIRMAN

2. **YG.BHG.DATUK B.SAHADEVAN**
   *PJN., SSA., PPT., ANS*
   MANAGING DIRECTOR / SECRETARY

3. **YG.BHG.DATO' BALARAM A/L PETHA NAIDU**
   *DSDK., AMN., AMK., JP*
   VICE CHAIRMAN

4. **ENCIK PAIDANAIDU A/L KALA RAMASAMY**
   *PMC*
   HON. TREASURER

5. **Y.BHG.TAN SRI DATO' DR. MARIMUTHU A/L THANGAVELOO**
   *DSDK., SDK., KMN*

6. **ENCIK V.KESAVAN A/L VERAN**
   *AMN., PPN*

7. **Y.BHG.DATO' VENGADESAN A/L PALANISAMY**
   *DIMP*

8. **ENCIK S.SUBRAMANIAM**
   *KMN*

9. **ENCIK MUTHUVELU A/L THANGAVELU**
   *PMC*

10. **DR.S.KANAGASABAI A/L SOKALINGAM**
    *PMP*

11. **ENCIK V.THAMASEGARAN A/L VIATHAINATHAN**
    *SSA., PMC*

12. **Y.BHG.DATO' PARASURAMAN A/L SANASAMY@SINNASAMY**
    *DSDK., SDK., PPN., PJK., BKM., PJ*


13. **ENCIK PITCHAY A/L MUTHUSAMY**
    *PPN., PJK., BTT*

14. **ENCIK P.MATIVANAN**
    *ANS., PJK., PMC*

15. **ENCIK KENAS A/L RAJOO**
    *PPN., PMP*

**DATO' RAJ SOMASUNDRAM : CHIEF EXECUTIVE OFFICER**
*DIMP., PMC*





SOLE VISION
advertising & design
t: +6 012 3709 333 f: +6 03 6134 8117
e: solevisiondesign@gmail.com
www.solevisionads.com